விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: நான்கு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 மார்கழி 02 ஞாயிற்றுக்கிழமை (17.12.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 353

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து


## நோர்வே தனது நண்பனை இழந்து விட்டது அஞ்சலி நிகழ்வில் ஹான்சன் பௌயர் உரை



(ஒஸ்லோ)

அன்ரன் பாலசிங்கத்தின் இழப்புத் தமிழ் மக்களுக்கு பேரிழப்பு. நோர்வே தனது நண்பனை இழந்து விட்டது. தமிழ் மக்களின் பிரச்சினைகளை, உரிமைகளை, சமாதானத்தின் மீதான அவாவை எடுத்துச் சொன்ன முதன்மைக் குரலை இழந்துள்ளனர் என இலங்கைக்கான விசேட சமாதானத் தூதுவர் ஹான்சன் பௌயர் தெரிவித்துள்ளார்.

நோர்வேயில் நேற்று முன்தினம் நடைபெற்ற அன்ரன் பாலசிங்கத்தின் நினைவு நிகழ்வில் நோர்வே அரசாங்கத்தின் வெளியுறவுச் செயலகத்தின் சார்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (04 ஆம் பக்கம் பார்க்க)



## சென்னையில் இரங்கல் கூட்டம்

(சென்னை)

விடுதலைப்புலிகளின் அரசியல்ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தின் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கும் வகையில் சென்னையில் கூட்டம் நடைபெறவுள்ளது.

சென்னை கோட்டூர்ப்புரத்திலுள்ள உலகத் தமிழ் பேரவை அலுவலகத்தில் எதிர்வரும் செவ் வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு இக் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழுவின் அமைப்பாளர் பழ.நெடுமாறன் தெரிவித்தார். (ச)

# இலங்கையில் சமாதானம் ஏற்படும் நோர்வே அரசாங்கம் நம்பிக்கை

(இஸ்லாமாபாத்)

இலங்கையில் மீளவும் நிரந்த சமாதானம் ஏற்படும் என்ற நம்பிக்கையை நாம் இழக்கவில்லை என்று சமாதான முயற்சிகளில் அனுசரணையாளராகச் செயற்படும் நோர்வே தெரிவித்துள்ளது.

அரசாங்கத்தையும் விடுதலைப்புலிகளையும் மீண்டும் பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டு வருவதில் ஏற்பட்டுள்ள தோல்வி குறித்து தாம் வருத்தமடைந்துள்ளதாக நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜொனாஸ் கார்ஸ்ரோர் தெரிவித்துள்ளார். (04 ஆம் பக்கம் பார்க்க)

## வாகரை மக்களைப் பாதுகாக்க ஐ.நா.சபை அவசர வேண்டுகோள்

(வாகரை)

மோதல்கள் இடம்பெறும் வாகரைப் பிரதேசத்திலிருந்து பொதுமக்கள் பாதுகாப்பாக வெளியேறுவதற்கான சந்தர்ப்பத்தை மோதல்களுடன் தொடர்புடைய இரு தரப்பினரும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று ஐக்கிய நாடுகள் சபை கேட்டுக் கொண்டுள்ளது.

அப்பிரதேசத்திலிருந்து வெளியேறும் மக்களின் பாதுகாப்பை இரு தரப்பினரும் உறுதி செய்ய வேண்டுமென்றும் அந்த சபை குறிப்பிட்டுள்ளது.

இரு தரப்பினரும் மோதல்களை நிறுத்த வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்துள்ள ஐக்கிய நாடுகள் சபை உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்ல தமிழீழ விடுதலைப்புலிகள் உதவ வேண்டும் மென்றும் வலியுறுத்தியுள்ளது.

அத்துடன் இடம் (04 ஆம் பக்கம் பார்க்க)

## கதிரவெளியில் ஷெல் தாக்குதல் ஏழு பொதுமக்கள் உயிரிழப்பு

### வாகரை வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு, கதிரவெளியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற எறிகணைத் தாக்குதல்சம்பவத்தில் இரண்டு சக்கர உழவு இயந்திரம் ஒன்றில் பயணித்த 7 பொதுமக்கள் பலியானதாக வாகரை வைத்தியசாலை வைத்தியகலாநிதி எம்.வரதராஜன் தெரிவித்துள்ளார்.

இவர்கள் கொல்லப்பட்ட விடயம் நேற்று முன்தினம் வெளியான போதும் உறுதிப் படுத்தப்படவில்லை. எனினும் நேற்று குறித்த சடலங்கள் அடக்கம் செய்யப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

கதிரவெளிப் பிரதேசத்தில் நேற்று முற்பகல் 10 மணியளவில் இடம்பெற்ற எறிகணைத் தாக்குதலில் 19 வயதான இளைஞன் ஒருவர் காயமடைந்துள்ளார்.

இதேவேளை போசாக்குக் குறைபாடு காரணமாக வாகரைப் பிரதேசத்தில் பிறக்கும் குழந்தைகள் நிறைகுறைந்து பிறப்பதாக வைத்தியகலாநிதி வரதராஜன் குறிப்பிட்டுள்ளார்.

சாதாரணமாக பிறக்கும் குழந்தைகள் இரண்டரைக்கிலோ நிறை இருக்க வேண்டும் என்ற நிலையில் அண்மையில் பிறந்த குழந்தைகள் 800 கிராமுடன் பிறந்ததாகவும் இதில் ஒரு குழந்தை பின்னர் இறந்துவிட்டதாக வும் அவர் தெரிவித்தார். (ச-133)

## யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு இராணுவத் தளபதி விஜயம்

(யாழ்ப்பாணம்)

இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சரத்பொன்சேகா தலைமையிலான உயர் மட்ட இராணுவக் குழு ஒன்று நேற்று காலை குடாநாட்டுக்கு திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டது.

பாதுகாப்பு நிலைவரங்களை ஆராய்வதே இராணுவத் தளபதி தலைமையிலான உயர் மட்டக்குழுவினரது இந்த விஜயத்தின் நோக்கமாகும் என்று பாதுகாப்பு அமைச்சு தெரிவித்திருக்கின்றது.

நேற்றுக்காலை விமானப்படை விமானம் மூலம் பலாலி விமானத்தளத்தைச்சென்றடைந்த இராணுவத் தளபதி தலைமையிலான உயர் மட்ட குழுவினரை யாழ்.மாவட்டக் கட்டளைத்தளபதி மேஜர் (04 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்குக் கிழக்குக்கு வெளியே காணாமல் போனோர் தொடர்பில் 62 முறைப்பாடுகள் பதிவாகின

(கொழும்பு)

வடக்குக் கிழக்குக்கு வெளியே மாத்திரம் கடந்த 4 மாதங்களில் காணாமல் போனோர் சம்பந்தமான 62 முறைப்பாடுகள் மக்கள் கண்காணிப்புக் குழுவிற்குக் கிடைத்திருப்பதாகக்குழுவின் உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இதில் 11 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 43 பேர் தொடர்பில் இன்னமும் தகவல்கள் இல்லை. காணாமல் போனவர்களில் 6 பேர் சிங்களவர்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை 8 பேர் கடத்தப்பட்ட பின் விடுதலை செய்யப்பட்டிருப்பதாக மனோ கணேசன் தெரிவித்தார். (ச-133)

## தேசத்தின் குரல் பாலாவுக்கு நோர்வேயில் அஞ்சலி நிகழ்வு



தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கத்திற்கு கண் ணீர் வணக்க நிகழ்வு நோர்வேயில் நடை பெற்றது. இந்நிகழ்வு நோர்வேத் தலைநகர் ஒஸ்லோவில் நேற்று முன்தினமிரவு 7 மணி முதல் 9 மணிவரை நடைபெற்றது. (04 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## வாகரையிலிருந்து நேற்று எட்டு பஸ்களில் பொதுமக்கள் அழைத்துச் செல்லப்பட்டனர்

வாகரையில் இருந்து நேற்று மாலை 8 பேருந்துகளில் பொதுமக்கள் வாழைச்சேனைக்கு அழைத்து செல்லப்பட்டிருக்கின்றார்கள். இவர்களை ஐ.ஓ.எம் எனப்படும் சர்வதேச புலம் பெயர்வோருக்கான அமைப்பு அழைத்து சென்றுள்ளது.

ஓமடியாமடு வெதுகன் என்ற இடத்தின் ஊடாக வெலிகந்தைக்கு வந்து அங்கிருந்து வாழைச்சேனைக்கு விநாயகர் நலன்புரி மையத்திற்கு இவர்கள் அழைத்து செல்லப்பட்டதாக தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

இதுவரை வாகரைப் பிரதேசத்திலிருந்து 11 ஆயிரத்து 120 பேர் வாழைச்சேனைப் பிரதேசத்திற்கு வந்திருப்பதாக தேசிய பாதுகாப்பு மையம் தெரிவித்திருக்கின்றது. (ச-133)

## தேசத்தின் குரலுக்கு சிறைச்சாலையில் தமிழ் அரசியல் கைதிகள் அஞ்சலி

மறைந்த மதியுரைஞர் தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கத்திற்கு அஞ்சலி செலுத்தும் முகமாக கொழும்பு புதிய மகசீன் சிறைச்சாலையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் பிரார்த்தனை மற்றும் வழிபாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

சிறையில் உள்ள 58 தமிழ் அரசியல் கைதிகளே இச்செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளதாக சிறைச்சாலை செய்திகள் தெரிவித்தன.

நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்ட இந்த அஞ்சலி நிகழ்வுகளை தொடர்ந்து மூன்று தினங்கள் நடத்தவுள்ளதாகக் கைதிகள் தெரிவித்துள்ளனர்.

தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கத்தின் உடல் அடக்கம் செய்யப்படும்வரை மூன்று வேளையும் ஆகாரம் எதுவும் அருந்தாமல் தாம் அஞ்சலி செலுத்தவுள்ளதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (ச-5)

## நாய்களுக்குத் தடுப்பூசி

மாநகர சபை எல்லைகளுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய் விசேட தடுப்பு மருந்து ஏற்றுதல் கீழ்வரும் நிலையங்களில் வைத்து வழங்கப்படவுள் ளது.

இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு மேற்படி தடுப்பூசியை ஏற்றிக் கொள்ளுமாறு யாழ்.மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி ம.மரியதாஸன் தெரிவித்துள்ளார்.

இன்று மீனாட்சி அம்மன் சனசமூக நிலையத்தில் காலை 8.30 - 10.30 மணிக்கும் கன்னாதிட்டிக் காளி கோவிலடியில் 11.00-12.30 மணிக்கும் நாவலர் மண்டபம் நீராவியடியில் பிற்பகல் 2.00- 4.00 மணி வரையும் நடைபெறும்.

நாளை கற்குளம் ச.ச.நிலையத்தில் 8.30-10.30 மணிக்கும் ஆத்திசூடி ச.ச.நிலையத்தில் 11.00-12.30 மணிக்கும் ஓட்டுமடம் கலைவாணி ச.ச.நிலையத்தில் 2.00- 4.00 மணிக்கும் இடம்பெறும். (ச)

## விவசாயக் கருத்தமர்வு

கியூடெக்-கரிதாஸ் ஏற்பாட்டில் அளவெட்டி புனித சூசையப்பர் ஆலயத்தில் விவசாயக் கருத்தமர்வு இன்று காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது. (ச)

## கிழக்குப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் கடத்தப்பட்டார்

கிழக்குப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசியர் எஸ்.ரவீந்திரநாத்தை கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.15 மணியில் இருந்து காணவில்லை என தெகிவளை பொலிஸார் அறிவித்துள்ளனர்.

பௌத்தலோக மாவத்தையின் உயர் பாதுகாப்பு வலயத்தில் அவர் காணாமல் போயுள்ளார் என தெரிவிக்கப்பட்டது.

பல்கலைக்கழக மானிய ஆணையத்தில் பணிபுரியும் ரவீந்திரநாத் அங்கு தமது பதவி விலகல் கடிதத்தை கொடுத்து விட்டு வித்தியா மாவத்தையில் ஒரு கூட்டத்துக்குச் சென்ற போது காணாது போயுள்ளார். அங்குதான் பகல் 12.30 மணிக்கு அவரது ஓட்டுநர் அவரைக் கடைசியாகப் பார்த்துள்ளார்.

கூட்டம் முடிந்ததும் தம்மை அழைத்துச் செல்ல பிற்பகல் 2.00 மணிக்கு வருமாறு ஓட்டுநரிடம் ரவீந்திரநாத் கூறியுள்ளார். ரவீந்திரநாத் துடன் தொட ர்பு கொள்ள முடியாத அவரது ஓட் டுநர் அவ ரின் குடும்பத்தின ரைத் தொட ர்பு கொண் டார்.

பின்னர் இரவு 9.30 மணியளவில் பொலிஸில் முறைப்பாடு கொடுக்க ப் பட்டது.



அவரதுபதவி விலகல் கடிதம் ஏற்றுக் கொள்ளப்படாத காரணத்தால் கொழும்பிலேயே வசித்து வந்த 55 வயதான ரவீந்திரநாத்துக்கு இரண்டு மகள்கள் உள்ளனர்.

முன்னதாக செப்ரெம்பர் 30ஆம் நாள் வெள்ளை வானில் வந்த அடையாளம் தெரியாத ஆயுததாரிகள் கிழக்குப் பல்கலைக் கழக கலைத்துறைப் பீடாதிபதி பாலசுகுமாரைக் கடத்தி சென்றனர்.

துணைவேந்தர் உடனடியாக பதவி விலக வேண்டும் என் றும் அவர்கள் நிபந்தனை விதித்தனர். மறு நாள் ஒக்ரோபர் முதல் நாள் அன்றே பேராசிரியர் தமது பதவி விலகல் கடிதத்தை ஒப்படைத்துவிட்டார். (ச-5)

## காத்தான்குடி வழமைக்குத் திரும்பியது

காத்தான்குடி நகரம் பத்து நாட்களின் பின்னர் வழமைக்குத் திரும்பியுள்ளது. கடந்தவியாழக்கிழமை பயில்வானின்சடலம் காத்தான்குடி தீன் வீதியிலுள்ள தரிக்கத்துல் முப்லஹீன் நிறுவன கட்டடத்துக்குள் புதைக்கப்பட்டமையையடுத்துச் சடலத்தைத் தோண்டுமாறு கோரி நடத்தப்பட்ட ஹர்த்தால் மற்றும் ஆர்ப்பாட்டங்கள் காரணமாகப்பத்துத் தினங்கள் கடைகள், அலுவலகங்கள், நிறுவனங்கள் யாவும் மூடப்பட்டிருந்தன.

அன்றாட அலுவலகங்கள் அனைத்தும் முற்றாக ஸ்தம்பிதமடைந்திருந்தன. கொழும்பு பிரதம நீதிவான், நீதிமன்ற மேலதிக நீதிவான் எம்.ஐ.எம். இர்ஷாதீன் சடலத்தைத் தோண்டுமாறு உத்தரவிட்டதையடுத்து வெள்ளிக்கிழமை மாலை பயில்வானின் சடலம் அப்புறப்படுத்தப்பட்டது.

அதனையடுத்து ஹர்த்தால், போராட்டங்கள் அனைத்தும் கைவிடப்பட்டன. நேற்றுச் சனிக்கிழமை கடைகள் திறந்தன , வாகனப் போக்குவரத்தும் இடம்பெற்றன.

கலவரங்களினால் சேதமடைந்த மற்றும் வீதிகளில் போடப்பட்டிருந்த ரயர்கள், கழிவுகள் அகற்றப்பட்டன. (ச)

## இலங்கை, சோமாலியா அகதிகளுக்கு அமெரிக்க ஜனாதிபதி புஷ் நிதியுதவி

(வோஷிங்டன்)

இலங்கை, சோமாலியா அகதிகளுக்கு உதவ 5.215 மில்லியன் அமெரிக்க டொலரை அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் ஒதுக்கியுள்ளார்.

இலங்கை சோமாலியா நாடுகளின் இனப்பிரச்சினையில் பாதிக்கப்பட்டு அகதிகளான மக்களுக்கு உதவ இந்த நிதி பயன்படுத்தப்படும் என அமெரிக்க வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது.

சொந்த நாட்டின் போர்ச் சிக்கல்களால் பாதிக்கப்பட்டு தப்பித்த அகதிகள் மற்றும் புலம் பெயர்ந்த மக்களின் எதிர்பாராத அவசரத் தேவைகளுக்கு இந்த நிதியை பயன்படுத்த வேண்டுமென வெளியுறவு அமைச்சர் கொண்டலீசா றைசுக்கு கடந்த வியாழக்கிழமை எழுதிய அறிக்கையில் புஷ் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிதியை அனைத்துலக, அரசு சார்ந்த, அரசு சாராத நிறுவனங்களின் தேவையைப் பொறுத்து அவர்களுக்கு உதவப் பயன்படுத்தலாம். மக்கள் தொகைப் பிரிவின் அகதிகள், புலம்பெயர்ந்தவர்கள் தொடர்பான நிர்வாகச் செலவுகளுக்கும் பயன்படுத்தலாம் எனவும் அந்தச் சுற்றறிக்கையில் புஷ் தெரிவித்துள்ளார். (எ-5)

## சுய தொழில் முயற்சிக்கான நிதியுதவி

யாழ்.மாவட்டத்தில் பல்வேறு காரணங்களால் கணவரை இழந்து மற்றும் கணவரால் கைவிடப்பட்டு கஷ்ட நிலையில் வாழ்ந்து வருகின்ற இளம் குடும்பப் பெண்களின் வாழ்க்கை நிலையை மேம்படுத்தும் நோக்கில், அவர்கள் சுயதொழில் முயற்சிகளில் ஈடுபட சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அமைச்சின் மூலம் நிதி உதவிகளை வழங்கவுள்ளார்.

இந்நிலையில் முதற்கட்ட நடவடிக்கையாக இதுவரையில் இனங்காணப்பட்டுள்ள 1500 பேருக்கு இம்மாதம் நாளை முதல் இந்நிதி உதவிகள் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இதன் பிரகாரம் நாளை யாழ்ப்பாணம் மற்றும் நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவுகளைச் சார்ந்தவர்களுக்கான நிதி உதவிகள் வழங்கப்படவுள்ளன.

20ஆம் திகதி சங்கானை மற்றும் சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கும் 22 ஆம் திகதி உடுவில் மற்றும் தெல்லிப்பழைப் பிரதேச செயலாளர் பிரிவுகளைச் சார்ந்தவர்களுக்கும் 23ஆம் திகதி கோப்பாய் மற்றும் சாவகச்சேரிப் பிரதேச செயலாளர் பிரிவுகளைச் சார்ந்தவர்களுக்கும் 26ஆம் திகதி கரவெட்டி மற்றும் பருத்தித்துறைப் பிரதேச செயலாளர் பிரிவுகளைச் சார்ந்தவர்களுக் கும் 28ஆம் திகதி காரைநகர் மற்றும் ஊர்காவற்றுறை பிரதேச செயலாளர் பிரிவுகளைச் சார்ந்தவர்களுக்கும் 30ஆம் திகதி வேலணை மற்றும் நெடுந்தீவு ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளைச் சார்ந்தவர்களுக்கும் மேற்படி உதவித் தொகைகள் வழங்கப்படவுள்ளன. (எ)

## கிழக்கில் அவலமும் கோரமும் தொடர்கிறது உடன் பிறப்புக்களையும் இழக்கின்றோம்

## வாகரை மக்கள் புலம்பல்

கிழக்கில் தொடரும் அவலமும் அழிவும் கோரமானமுறையில் கடந்த ஏப்ரல் 25 ஆம்26 ஆம் திகதிகளில் ஆரம்பமானது. அப்போது ஆரம்பமான அலைச்சலும் அவலமும் கோரமும் தொடர்ந்தவண்ணமேயுள்ளது.

இதனால் நூற்றுக் கணக்கான எமது உடன்பிறப்புக்களையும் உறவுகளையும் இழந்துள்ளோம். இந்தப்பயங்கரவாதத்துக்கு முடிவு வராதா? என்றுதான் பலரும் ஏங்கித் தவிக்கின்றனர்.

இவ்வாறு வாகரையிலிருந்து கடல்வழியாக வாழைச்சேனைக்கு தப்பிவர முயன்று கடலுடன் சங்கமான தமிழ் உடன்பிறப்புக்குகள் நிலைமைபற்றிக் கருத்துவெளியிட்ட மூதூர் கிழக்கிலிருந்து இடம்பெயர்ந்த அரச ஊழியர் ஒருவர் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

கடந்த ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி மூதூர் கிழக்கிலுள்ள சம்பூர் பகுதி மீது கடல், தரை, ஆகாயம் என மும்முனைகளிலிருந்தும் முப்படைகளின் கோரத் தாக்குதல் ஆரம்பமானது.

அது மறுநாளும் தொடர்ந்தது. அதன் போது ஐந்துக்கும் மேற்பட்ட உறவுகள் உடல் சிதறி உருக்குலைந்து போயின. பல வீடுகள், பாடசாலைகள், கால்நடைகள் என பலவும் சிதறி சின்னாபின்னமாகின.

அன்றோடு வீடுகள், உடைமைகள், சொத்துக்களை விட்டு உயிரை மட்டும் காப்பாற்றினால் போதுமென்ற எண்ணத்துடன் பிள்ளைகளையும்உறவுகளையும் கூட்டிக் கொண்டு ஓடத்தொடங்கினோம்.

இன்றுவரை அங்குமிங்கும் தொடர்ந்தும் ஓடியவண்ணமேயுள்ளோம். இந்த நிலையில் இருக்க முடியாது என்றே வாகரை வந்தோம். அங்கு நடந்த கோரங்களில் இதுவரை பல நூறு பொதுமக்களின்உயிர்கள் காவுக்கொள்ளப்பட்டன.

பெண்கள், குழந்தைகள் என உடல் சிதறி வீதியில் வாகனத்தில் அகப்பட்ட நாய்களைப் போன்று அழிந்த அவலம் மாறாத வடுவாகவுள்ளது.

பொதுமக்கள் வாழும் இடங்கள் இலக்கு வைக்கப்பட்டு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டன. இந்நிலையில் மக்கள் வேறுவழியின்றி உயிராபத்தை பொருட்படுத்தாது வெளியேறி வருகின்றனர்.

நாங்கள் ஏன் தமிழர்களாக அதுவும் இந்த நாட்டில் பிறந்தோம் என்றே தெரியவில்லை. இன்று கிட்டத்தட்ட எட்டு மாதங்களாக இந்த அழிவுகளையும் அவலங்களையும் சந்தித்த வண்ணம் உடைமை, உறவு, இல்லிடம் என பலவற்றையும் விட்டு அலைந்த வண்ணம் உள்ளோம்.இன்னமும் இப்பயணத்துக்கு முடிவுஇல்லை என விபரித்தார்.

நான் அறிந்த காலம் தொட்டு மாறிமாறி வந்த அரசுகள் ஒவ்வொன்றும் இப்படித்தான் கூறி வந்திருக்கின்றன. ஆனால் புலிகள் ஒழிந்ததனை விட பெருகியதுதான் வரலாறு.

அப்பாவிகள் அழிந்ததே நடந்திருக்கின்றன. இன்றும் இதனால்தான் அழிகின்றன. இச் சம்பவங்களை நேரடியாகப் பார்த்தால் உங்களுக்கும் புரியும்.

இதனால்தான் தமிழ் மக்கள் இந்த அரசுகளை நம்புவதில்லை என கனத்த குரலில் கூறினார். (எ)

## 12-வது நாளாகவும் தொடரும் போராட்டம்

நியாயமான சம்பள உயர்வு தமக்கு வழங்க வேண்டும் எனக் கோரி நேற்றுச்சனிக்கிழமை 12 வது நாளாகவும் தோட்டத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இரத்தினபுரி மாவட்டத்தில் உள்ள பல்வேறு தோட்டப் புறங்களைச் சேர்ந்த சுமார் 8 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் தொடர்ந்தும் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதேவேளை தோட்டத் தொழிலாளர்களின் வேலைநிறுத்தப் போராட்டத்துக்குப் பெரும்பான்மையினத்தவர்களும் முழு ஒத்துழைப்பை வழங்கி வருகின்றனர். (ச)

## திருமலைத் தபாலகத்தில் தேங்கியுள்ள பொதிகளை அனுப்புவதற்கு நடவடிக்கை

(திருகோணமலை)

திருகோணமலை பிரதான தபால் நிலையத்தில் குவிந்திருக்கும் தபாற் பொதிகளை அனுப்புவதற்கான ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்காக வாரத்தில் ஒரு நாளில் முல்லைத் தீவு தபால் நிலையத்திற்குரிய பொதிகள், அதிகாரிகள் முன்னிலையில் கடற்படையினரால் அவிழ்க்கப்பட்டு சோதனையிடப்பட்டதன் பின் மீண்டும் பொதியிடப்பட்டு கப்பலுக்கு ஏற்றப்படுவதற்கான நடவடிக்கைகள் இடம் பெற்றுவருகின்றன.

மேற்படி பொதிகளை சோதனையிட்டு மீண்டும் பொதியிடுவதற்கு பாரிய செலவு மேற்கொள்ள வேண்டியுள்ளதாக திருகோணமலை பிரதான தபால் நிலைய பொறுப்பதிகாரி எஸ்.விவேகானந்தன் தெரிவித்துள்ளார்.

இப்பொதிகளின் சோதனையில் கற்பூரம், பற்றிரி, மின் உபகரணம் மற்றும் வயர் போன்ற உபகரணங்களை அனுப்புவதற்கும் தடைவிதித்துள்ளதாக கடற்படையின் விசேட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (ச-5)

எவ்வளவுக் கெவ்வளவு கெட்டவர்களாக இருக்கிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு துன்பங்களை மனிதர்கள் அனுபவிக்கிறார்கள்.

—பிளேட்டோ

வலம்புரி

# வெளி மாவட்டப் பயணத்திற்காக அலையும் மக்களின் பரிதாபம் பாரீர்

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிமாவட்டங்களுக்கு செல்வதற்காக மக்கள் படும்பாடும் சொல்லும் தரம் அன்று.

பாதுகாப்பு அனுமதிக்கான விண்ணப்பங்களை பெறுவதுமுதல் கப்பலில் இடம் பிடிப்பதுவரை எல்லாமே முடியாத காரியமாகவுள்ளது.

கப்பலில் பயணத்தை மேற்கொள்வதற்காக முதல் நாளே யாழ்.சிங்கள மகாவித்தியாலய மைதானத்திற்கு முன்பாக உள்ள வீடுகளில் தங்கும் மக்களின் நிலைமை பரிதாபத்திற்குரியது.

பனி, நுளம்புத்தொல்லை எல்லாவற்றையும் சகித்துக் கொண்டு ஏதோ கப்பல் ஏறினால் போதும் என்ற முடிபோடு தரையிலும் மண்ணிலும் உறங்கி விழிக்கும் சோகம் எத்தனை காலத்திற்கு நீடிக்கப் போகிறதோ எல்லாம் அந்த இறைவனுக்கே வெளிச்சம்.

பயணத்திற்காக மக்கள் படும்பாட்டின் விளைவு, வெளிமாவட்டங்களுக்கு சென்றால் போதும் யாழ்ப்பாணம் வேண்டாம் என்ற முடிபையே எடுக்க வைக்கும். அந்தளவிற்கு பயண நிலைமை படும் மோசமாகியுள்ளது.

எத்தனையோ தேவைகளை மையமாகக் கொண்டு யாழ்ப்பாணத்திலிருந்து வெளிமாவட்டங்களுக்கும் வெளிமாவட்டங்களிலிருந்து யாழ். மாவட்டத்திற்கும் மக்கள் சென்று வரும் அவசியப்பாடு உண்டு.

இதற்கெல்லாம் காரணம், அந்த காரணத்தை நிரூபிக்கும் ஆதாரங்கள் இவை யெல்லாம் தேவையென்றால் யாழ்ப்பாணத்திலிருந்து எவருமே வெளிமாவட்டங்களுக்கு செல்ல முடியாது போகும்.

பாதுகாப்பு அனுமதிக்கான விண்ணப்பத்தை பெறமுடியாமல் மக்கள் படும்பாடு அவர்களை மேலும் வதைப்பதாக உள்ளது.

பயணத்திற்கான தரவு நிலை பேணப்பட வேண்டும்.இதை விடுத்து வெளிமாவட்டத்திற்கு செல்ல முடியாது என்று கூறுகின்றபோது பிரஸ்தாப நபர் அச்சமுறுகின்ற நிலையும் அதனால் அவர் பயப்பீதியுடன் வாழும் துர்ப்பாக்கிய நிலையும் ஏற்படும்.

இது தனி மனிதனுக்கு மட்டும்மல்ல, காரண காரியத்துடனேயே பாதுகாப்பு அனுமதிக்கான படிவங்களை பெறமுடியும் என்ற நடவடிக்கை யாழ்ப்பாணத்தில் வாழும் ஒட்டு மொத்த மக்களினதும் வாழ்வுக்கு அச்சம் தரக்கூடியதே.

எனவே பயணிகள் விடயத்தில் சம்பந்தப்பட்டவர்கள் நெகிழ்ந்த போக்கை கடைபிடிக்க வேண்டும். அப்போதுதான் மக்கள் படும் மிகப் பெரும் கஷ்டம் கொஞ்சமேனும் விடுபடும்.

இவையெல்லாவற்றுக்கும் சுமுகமாக தீர்வு காண்பதற்கு, யாழ். குடாநாட்டு மக்களின் அவல வாழ்வு-பட்டினிச்சாவு நீக்குவதற்கும் ஏ-9 பாதையை திறப்பது அரசினால் எடுக்கப்பட வேண்டிய முடிபாகும்.

குடாநாட்டு மக்கள் எதிர் நோக்கியுள்ள என்றுமில்லாதவாறான பொருளாதார கஷ்டத்தில் அரசு இந்த முடிபை எடுக்கவில்லையாயின் அதற்கான பதிலை அரசு சொல்லியே ஆக வேண்டும் என்பதற்கு அப்பால், அதற்கான விளைவும் பாரதூரமானதாக அமையும்.

விளைவுகள் நிகழ்ந்த பின்னர் அது பற்றி வேதனை கொள்வதை விட வருமுன்னர் தடுப்பதும் - தவிர்ப்பதும் நல்லது அல்லவா?

# பாலசிங்கத்தின் மறைவுக்கு முஸ்லிம் காங்கிரஸ் அனுதாபம்

'தேசத்தின் குரல்' அன்ரன் பாலசிங்கம் தமிழர் இனப் பிரச்சினையில் அவரது அர்ப்பணிப்பையும் பேச்சு மேசையில் அவருக்கு இருந்த அபரிமிதமான திறமைகளையும் நான் கண்டு வியந்திருக்கிறேன். என சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

போர்நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தானதும் இடம் பெற்ற ஆறுகட்டப் பேச்சுக்களில் விடுதலைப் புலிகள் குழுவுக்கு அன்ரன் பாலசிங்கம் தலைமை தாங்கிய போது அரச குழுவில் ஹக்கீமும் கலந்து கொண்டிருந்தார்.

கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தின் மறைவு விடுதலைப் புலிகள் அமைப்பில் மிகப்பெரிய வெற்றிடமொன்றை உருவாக்கிவிட்டது. தலைமையின் முடிபுதான் இறுதியானது என்ற ஒற்றைக் கொள்கைத் தன்மை கொண்ட விடுதலை அமைப்பில் தானும் சுயமாக முடிபுகளை எடுத்து எடுத்த முடிபுகளின் வழி உறுதியாக நிற்கும் திறமை கொண்டவர் அவர்.

செப்ரம்பர் 2002 இல் லண்டனில் அவரைத் தனியாகச் சந்தித்த போது முஸ்லிம் தரப்பிற்கும் தனியான பேச்சுக்குழு அனுமதிக்கப்பட வேண்டும் என்ற தனது கருத்தை அன்ரன் பாலசிங்கம் ஏற்றுக் கொண்டதாகக் குறிப்பிட்ட ரவூப் ஹக்கீம் இதன் பின்னர்தான் எரிக்சொல்ஹெய்மும் இந்தக் கருத்தை வெளிப்படுத்த அவர் மூலம் இணக்கமான ஒரு சூழல் உருவானது என்றும் தெரிவித்துள்ளார்.

தனிப்பட்ட முறையில் பல்வேறு நோய்களாலும் பாதிப்படைந்து துன்பங்ளை அனுபவித்தாலும் இனப்பிரச்சினை தொடர்பில் உறுதியுடன் செயற்பட்டார். அண்மைக் காலத்தில் அவர் ராஜீவ் காந்தியின் கொலை தொடர்பாக கருத்துத் தெரி வித்தமை போன்ற விடயங்களை நோக்கும் போது அரசியல் யதார்த்தத்தை அவர் உணர்ந்து அர்ப்பணிப்புடன் செயற்பட் டார் என்பதை அவதானிக்கலாம் என்றும் ஹக்கீம் கூறினார்.

இலங்கையில் வாழும் தமிழர்களுக்கு உரிமைகளைப் பெற்றுக்கொடுக்கும் அன்ரன் பாலசிங்கத்தின் பயணத்தில் இணையற்ற தோழியாக அவருடன் வாழ்ந்த அவரது துணைவியார் திருமதி அடேல் பாலசிங்கத்திற்கு ஆழ்ந்த அனுதாபங்களை முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துக் கொள்கிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சு-1)

# வாகரையில் பாதுகாப்பு வலயம் ஏற்படுத்த துரைரட்ணசிங்கம் எம்.பி.கோரிக்கை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாகரையில் ஒரு பாதுகாப்பு வலயத்தை ஏற்படுத்த வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே. துரைரட்ணசிங்கம் கோரிக்கை விடுத்துள்ளார்.

பாதுகாப்பு வலயத்தை ஏற்படுத்த அரசாங்கத்தை இணங்கச் செய்ய வேண்டுமென இலங்கை போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவிடமும் அனைத்துலக சமூகத்திடமும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

படையினரின் தொடர்ச்சியான தாக்குதல்களால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் வாகரையில் அகப்பட்டுள்ளனர். அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் வகையில் ஒரு பாதுகாப்பு வலயத்தை வாகரையில் ஏற்படுத்த வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

வாகரையில் பட்டினியால் வாடும் தமிழ்க் குழந்தைகள் ஏறிணை மற்றும் வான் தாக்குதல்களில் இருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ள வெறுங்கைகளாலும் அரசு சாராத தொண்டர் நிறுவனங்கள் வழங்கிய அலுமினியத் தகடுகளாலும் பதுங்கு குழிகளைத் தோண்டுகிறார்கள்.

அதேவேளையில் உதவி நிதிகளும் இயந்திரங்களும் கல்லாறு பகுதியில் இராணுவ முகாம்களுக்கு அருகில் வாழும் சிங்கள மக்களுக்கு வழங்கப்பட்டு வருவதாக அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

மேலும் மனிதாபிமான உதவிகளைப் பெறவும் மருத்துவ சிகிச்சை பெறவும் அகதிகள் கடல் பரப்புகளையும் தாண்டி பல மைல் தூரம் நடக்க வைக்கப்படுகிறார்கள் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவுடன் இணைந்து வாகரை மக்கள் வாழ்வதற்கான ஒரு பாதுகாப்பு வலயத்தை ஏற்படுத்தித் தரவேண்டும் எனவும் வேண்டுகோள் விடுக்கிறேன் என்று நாடாளுமன்ற உறுப்பினர் துரைரட்ணசிங்கம் தெரிவித்துள்ளார். (ஏ)

# இலங்கைக்கு வெடிபொருள் சப்ளை விசாரணை நடத்த சோனியா உத்தரவு

(சென்னை)

இலங்கைக்கு லொறி மூலம் வெடிபொருள் விநியோகிக்கப்பட்டமை குறித்து விசாரணை நடத்த அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து முதலமைச்சர் கருணாநிதிக்கு அவர் எழுதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

இலங்கைக்கு எடுத்துச் செல்வதற்காக வெடிபொருள்களுடன் சென்ற லொறியை பொலிஸார் பிடித்துள்ளமை குறித்து டிச.9-ம்திகதியன்று டில்லியில் நேரில் சந்தித்த போது குறிப்பிட்டிருந்தீர்கள்.

இது தொடர்பாக டிச. 11-ம் திகதியன்று உங்களது விரிவான கடிதமும் கிடைத்துள்ளது.

எனக்குக் கிடைத்த தகவலின்படி வெடிபொருள்களை விற்பனை செய்யும் தனியார் நிறுவனம் மூலம் அந்த வெடிபொருள்கள் இலங்கை கடற்படைக்கு அனுப்பட்டுள்ளன. அந்த வெடிபொருள்கள் கடலை ஆழப்படுத்தும் பணிக்காகவும் பாறைகளைத் தகர்க்கும் பணிக்காகவும் பயன்படுத்துவதற்காக அனுப்பட்டது என்று தனியார் நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. இந்த விடயம் குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

எத்தகைய சூழலில் எந்த அதிகாரியின் அனுமதியோடு இத்தகைய வெடிபொருள்கள் அனுப்பப்பட்டன என்பன குறித்து விரிவான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இலங்கைப் பிரச்சினையில் இந்திய அரசின் நிலை மிகவும் தெளிவானது. இலங்கையில் வாழும் மக்களுக்குப் பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் எந்த சூழ்நிலையிலும் எத்தகைய ஆயுதங்களும் இலங்கைக்கு விநியோகம் செய்யப்படக்கூடாது என்பதில் அரசு உறுதியாக உள்ளது.

இலங்கையில் வாழும் தமிழர்களின் நலனைக் கருத்தில் கொண்டு தமிழ் மக்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் எந்த நடவடிக்கையையும் மேற்கொள்ளக் கூடாது என்பதே காங்கிரஸ் கட்சியின் நிலைப் பாடாகும் என்று குறிப்பிட்டுள்ளார் சோனியா காந்தி. (ச)

# கண் சிகிச்சை முகாம்

யாழ்.குடாநாட்டில் கண் பார்வைக் குறைபாட்டினால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்குக் கண் சத்திர சிகிச்சை முகாமொன்றை நடாத்த சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஏற்பாடு செய்துள்ளார். இதன் பிரகாரம் எதிர்வரும் ஜனவரி மாதம் 18ஆம் 19ஆம் திகதிகளில் நடாத்தப்பட்டுள்ள மேற்படி முகாமின் போது கண் பார்வைக் குறைவால் பாதிக்கப்பட்டுள்ள யாழ். குடாநாட்டு மக்களுக்கு உரிய சிகிச்சைகள் வழங்கப்பட்டு அவர்களுக்குத் தேவையான மூக்குக் கண்ணாடிகள் மற்றும் கண் வில்லைகள் என்பனவும் வழங்கப்படவுள்ளன என சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இக்கண் சத்திர சிகிச்சை முகாமில் கலந்து கொண்டு பயன்பெற விரும்புகின்றவர்கள் தற்போது அமைச்சரின் யாழ். அலுவலகத்தில் தங்களைப் பதிவு செய்து கொள்ள முடியும் எனவும் ஏற்கனவே பதிவு செய்தவர்கள் மீண்டும் பதிவு செய்யத்தேவையில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. (சு)

# பாதிப்புற்றுள்ள மக்களுக்கு ஐ.சி.ஆர்.சி. உதவ வேண்டும்

## புலிகள் கோரிக்கை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவத்தின்எறிகணைத் தாக்குதல்கள் காரணமாகப் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து வாழும் மக்களுக்கு நிவாரண உதவிகள் மற்றும் வைத்திய உதவிகள் சென்றடைய வழிவகைகள் செய்யுமாறு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப்பிரதிநிதிகளிடம் விடுதலைப்புலிகள் வலியுறுத்தியுள்ளனர்.

இது சம்பந்தமான கலந்துரையாடல் நேற்று முன்தினம் கொக்கட்டிச்சோலையகத்தில் நடைபெற்றுள்ளது. முற்பகல் 11 மணியளவில் நடைபெற்ற சந்திப்பின் போது மட்டக்களப்பு மாவட்ட துணை அரசியல் துறைப்பொறுப்பாளர் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்டப்பிரதிநிதி மார்ல், அம்பாறை மாவட்ட பிரதிநிதி ஹரிஸ், நிர்வாக அதிகாரி சத்துரு ஆகியோர் கலந்து கொண்டனர்.

விடுதலைப்புலிகள் தரப்பில் துணை அரசியல் துறைப் பொறுப்பாளர் சீராளன்,பட்டிருப்கோட்ட அரசியல் துறை பொறுப்பாளர் செல்வா, புளியந்தீவுகோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் அன்புமாறன் மற்றும் திட்டமிடலுக்கும் மேம்பாட்டுக்குமான பொறுப்பாளர் மனோஜ் ஆகியோர் கலந்து கொண்டனர். (சு)

# பாலசிங்கத்தின் படம் தாங்கிய ஊர்தி கிளிநொச்சி நகர்ப் பகுதியில் வலம்

(கிளிநொச்சி)

தேசத்தின் குரல் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தின் திருவுருவப்படம் தாங்கிய ஊர்தி



கிளிநொச்சி மாவட்டத்தின் பல்வேறு இடங்களுக்கும் மக்கள் வணக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படவுள்ளன. நேற்று பிற்பகல் 5.00 மணிக்கு கிளிநொச்சி நகர்ப் பகுதியில் மக்கள் வணக்கத்துக்காக எடுத்துச் செல்லப்பட்டது.

இன்று பரந்தன் பிரதான சந்தியில் இருந்து விசுவமடுப் பிரதேசத்திற்கு இவ் திருவுருவப் படம் தாங்கிய ஊர்தி தருமபுரம்,வட்டக்கச்சி ஊடாக எடுத்துச் செல்லப்பட்டு கிளிநொச்சி, முழங்காவில் ஆகிய பகுதிகளுக்கு மக்களின் வணக்கத்திற்காக எதிர்வரும் செவ்வாய் கிழமைவரை எடுத்துச் செல்லப்படவுள்ளது. இன்றைய தினம் தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கத்தின் திருவுருவப்படத்திற்கு கண்ணீர் மல்க மக்கள் மலர்வணக்கம் செலுத்தியுள்ளனர். (ச)

# நிபுணர் குழுவிலிருந்து ஹெலஉறுமய விலகும்?

ஜாதிக ஹெல உறுமயவும் சர்வகட்சி நிபுணர்கள் குழுவிலிருந்து விலகுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக தெரி விக்கப்படுகின்றது. இது குறித்து நாளை திங்கட்கிழமை கட்சியின் உயர்பீடம் ஒன்றுகூடி தீர்மானிக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. ஏற்கனவே சர்வகட்சி நிபுணர்கள் குழுவி லிருந்து விலகியுள்ள ஜே.வி.பி சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவிலிருந்தும் வெளியேற முயற்சிப்பதாக தெரிகின்றது. (ச-9)

# யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு...

ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி வரவேற்று அழைத்துச் சென்றார்.

பின்னர் பலாலி இராணுவத் தளத்தில் கள நிலைவரங்கள் தொடர்பாக ஆராயும் விசேட கூட்டம் ஒன்று இடம்பெற்றது. இக் கூட்டத்தில் எதிர்காலப்பாதுகாப்புஏற்பாடுகள் குறித்தும் இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சரத்பொன்சேகா கூட்டத்தில் பங்கேற்ற அதிகாரிகளிடம் விளக்கியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை இராணுவத் தளபதி, விமானப்படைத்தளபதி உள்ளிட்ட உயர் மட்டப் பாதுகாப்புக் குழு ஒன்று நேற்று முன்தினம் மதியம் கிழக்கிற்கு விஜயம் செய்து அங்குள்ள பாதுகாப்பு நிலைவரங்கள் குறித்தும் ஆராய்ந்திருக்கின்றது.

இந்த உயர் மட்டக் குழுவினர் வெலிக்கந்தையிலுள்ள 23- வது படைப் பிரிவுத்தலைமையகத்தில் கிழக்கு மாகாண இராணுவ உயர் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தியுள்ளனர். அத்துடன் வாகரை நிலைவரம் குறித்தும் எதிர்கால நடவடிக்கைகள் குறித்தும்இங்கு ஆராயப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ச)

# தேசத்தின்...

நோர்வே வாழ் தமிழீழ உறவுகள் பல நூற்றுக் கணக்கானோர் தேசத்தின் குரலுக்குத் தமது கண்ணீர் வணக்கத்தைச் செலுத்துவதற்காகத் திரண்டிருந்தனர். நோர்வேப் பிரதி நிதிகளும் இந் நிகழ்வில் பங்கேற்றிருந்தனர்.

நோர்வேயின் சிறப்புச் சமாதானத் தூதுவர் ஹான்சன் பௌயர் 1998 ஆம் ஆண்டு மதியுரைஞருக்கு நோர்வேயில் சிறுநீரக மாற்றீட்டுக்குரிய சத்திரசிகிச்சையை செய்த மருத்துவர் பேர்பௌக்கால்ட் மற்றும் நோர்வே தொழிற்கட்சியின் ஒஸ்லோப் பிரதேச துணைத் தலைவர் ஈவார் கிறிஸ்திஜான்சன் ஆகியோர் கலந்து கொண்டு மதியுரைஞரின் இழப்பையிட்டு தமிழ் மக்களுக்கும் மதியுரைஞரின் துணைவியார் அவர்களுக்கும் தமது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்து நினைவுரை ஆற்றியிருந்தனர்.

தொடர்ந்து மக்கள் அனைவரும் தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கத்தின் திருவுருவப் படத்துக்கு மலர் வணக்கம் செலுத்தினர். மலர் வணக்க நிகழ்வைத் தொடர்ந்து தமிழ் உணர்வாளர்கள், செயற்பாட்டாளர்கள் மற்றும் நோர்வேப்பிரதிநிதிகளின் நினைவுப் பகிர்வுகளும் கருத்துரைகளும் இடம்பெற்றன. (ச)

# ஈழத் தமிழரின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்

## ஜெயலலிதா கோரிக்கை

(சென்னை)

இலங்கைத் தமிழர்களின் முழுஉரிமையும் பாதுகாக்கப்பட வேண்டும். அவர்கள் கண்ணியத்துடன் வாழ்க்கை நடத்த இலங்கை அரசு வசதி செய்து தர வேண்டும். அதுவே இலங்கை விவகாரத்தில் அ.தி.மு.கவின் நிலைப்பாடு.

பயங்கரவாதம் எந்த ரூபத்தில் வந்தாலும் அதனை அ.தி.மு.க. எதிர்க்கும். வை.கோ. எங்கள் கூட்டணியிலிருந்து கொண்டு ஈழப் பிரச்சினையை ஆதரிக்கிறார் என்பதற்காக அவரது கொள்கையை நாம் ஏற்றுக் கொண்டதாக அர்த்தமில்லை என்று அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

மத்திய அரசைப் பொறுத்தவரை சோனியா காந்தி எனக்கு எதிரியல்ல. அவரை நான் தனிப்பட்டமுறையில் எதிர்க்கவில்லை. அவர் பிரதமராவதையே எதிர்த்தேன் என்றும் ஜெயலலிதா கூறியுள்ளார்.

சென்னையிலுள்ள அ.தி.மு.க. அலுவலகத்தில் நேற்று முன்தினம் நிருபர்களுக்குப் பேட்டிஅளித்த போதே அவர் இவ்வாறு கூறினார்.

அப்போது நிருபர்கள் கேட்ட கேள்விகளும் அவர் அளித்த பதில்களும் வருமாறு;

*கேள்வி:-* அப்லைப்போன்றே ராஜீவ் காந்தி கொலையாளிகளுக்கு விதிக்கப்பட்ட தண்டனையும் நிறைவேற்றப்படாமல் இருப்பது ஏன்?

*பதில்:-*சி.பி.ஐ. மிகவும் சிரமப்பட்டு ராஜீவ் கொலை வழக்கை விசாரித்தது. அவர்களின் விசாரணைக்கு எனது ஆட்சிக் காலத்தில் முழு ஒத்துழைப்புக் கொடுக்கப்பட்டது.

தனி நீதிபதிக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டது. அவருக்குப் பொலிஸ் பாதுகாப்புக் கொடுத்தோம். மாநில அரசு காவல்துறையுடன் சி.பி.ஐ. விசாரித்தது.

நீதிமன்ற விசாரணை முடிந்து குற்றவாளிகளுக்கு மரண தண்டனை வழங்கிய பிறகும் ◌தனை நிறைவேற்றாமல் இருப்பது ஏன் என்பதுதான் எனக்குத் தெரியவில்லை.

இந்தமாதிரி இந்தியாவைத் தவிர உலகத்தில் வேறு எந்த நாட்டிலும் நடக்க வாய்ப்புக் கிடையாது. எனது அரசையும் மற்றும் சி.பி.ஐ. காவல்துறையையும் முட்டாளாக்கி விட்டார்கள் என்றுதான் அர்த்தம்.

*கேள்வி:-* உங்கள் கூட்டணியில் இடம் பெற்றுள்ள வை.கோ. மீண்டும் ஈழப் பிரச்சினையை ஆதரித்துப் பேசுகிறாரே?

*பதில்:-* கூட்டணியிலிருப்பதால் அவர்கள் சொல்வதை நான் ஏற்றுக் கொள்வதாக அர்த்தமில்லை. மத்தியில் காங்கிரஸ் கட்சியை கம்யூனிஸ்ட் கட்சிகள் ஆதரிக்கவில்லையா?

எங்களைப் பொறுத்தவரையில் எங்கள் நிலைப்பாட்டில் தெளிவாக இருக்கின்றோம். இலங்கைத் தமிழர்களின் முழுஉரிமைகளும் பாதுகாக்கப்பட வேண்டும் .அவர்கள் கண்ணியத்தோடு வாழ்க்கை நடத்த இலங்கையரசு வசதி செய்து தர வேண்டும் அதுதான் அ.தி.மு.கவின் நிலைப்பாடு. பயங்கரவாதம் எந்த ரூபத்தில் வந்தா லும் அ.தி.மு.க. எதிர்க்கும் என்றார் ஜெயலலிதா. (ச)

# வாகரை...

பெயரும் மக்களின் பாதுகாப்பை இராணுவம் உறுதி செய்ய வேண்டுமென்றும் அந்த சபை கேட்டுக் கொண்டுள்ளது. பொது மக்களையும் உள்ளூரில் இடம் பெயர்ந்த மக்களையும் பாதுகாக்கும் விடயத்தில் சர்வதேச மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான சட்டங்களுக்கு இரு தரப்பினரும் கட்டுப்பட வேண்டுமென ஐக்கிய நாடுகள் சபை வலியுறுத்தியுள்ளது. (ச-9)

# நோர்வே தனது நண்பனை இழந்து விட்டது...

நான் சமாதானப்பணியைப் பொறுப்பேற்றபின்னர் அன்ரன் பாலசிங்கத்தைச் சந்திக்கக் கிடைத்த வாய்ப்பில் ஐரோப்பாவின் முத ன்மைச்சிந்தனையாளர் பற்றி விவாதித்தமையும் அவர்களுடைய தத்துவார்த்த சிந்தனைகளையும் இலங்கைத்தீவின் சமாதான முயற்சிகளுக்கு எவ்வாறு பயன்படுத்தலாம் என ஆராய்ந்த நிகழ்வு எனக்கு பெரும் மகிழ்ச்சியாய் அமைந்தது என்றும் ஹான்சன் பௌயர் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், வார்த்தைகளால் வர்ணிக்க முடியாத பேராற்றலும் நிறைந்த பட்டறிவும் கொண்ட யதார்த்த மனிதர் அன்ரன் பாலசிங்கம.

தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல நான் சந்தித் பல சிங்களப் பிரதிநிதிகளும் மற்றும் உலக மட்டத்திலும் பலர் அன்ரன் பாலசிங்கத்தின் மீது பெருமதிப்புக் கொண்டுள்ளனர்.

மதிப்பிட முடியாத அவருடைய ஆளுமையும் அறிவாற்றலுமே பல மட்டங்களிலும் அவருக்கு அத்தகைய மதிப்பினை ஏற்படுத்தியது.

1987 இல் திம்புப் பேச்சுவார்த்தையிலிருந்து தொடர்ச்சியாக இற்றைவரை பல்வேறு சமாதான முன்னெடுப்புக்களில் பங்கேற்று வந்தவர் என்ற வகையில் சமாதான முயற்சிகள் தொடர்பான ஆழமான பட்டறிவு அவரிமிருந்தது என்று ஹான்சன் பௌயர் தனது உரையில் மேலும் தெரிவித்தார்.

அன்ரன் பாலசிங்கம் சமாதானத்துக்கான உறுதியுடன் உழைத்தவர். ஆனால் சிங்களக் கடும் போக்காளர்களின் விட்டுக் கொடுப்பற்ற நிலைப்பாடுகளால் சமாதானம் தோற்றுப் போய்விட்டது என கண்ணீர் வணக்க நிகழ்வில் நினைவுரையாற்றிய தொழிற் கட்சியின் ஒஸ்லோப் பிரதேச துணைத்தலைவர் ஈவார் கிறிஸ்திஜான்சன் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், சந்திரிகா குமாரதுங்கவும் அவரைத் தொடர்ந்து பதவி ஏற்றுள்ள மகிந்த ராஜபக்ஷவும் தமிழ் மக்களுடைய தாயக உரிமை, சுயநிர்ணய உரிமையை மறுதளித்துள்ளனர்.

அன்ரன் பாலசிங்கம், பிரபாகரனின் முழு நம்பிக்கைக்குப்பாத்திரமாக விளங்கியவர் என்றும் ஈவார் கிறிஸ்திஜான்சன் மேலும் தெரிவித்தார்.

ஒஸ்லோப் பல்கலைக்கழகத்தில் சமூகவியல் துறையில் ஆய்வுக் கற்கையை மேற்கொண்டு வரும் சர்வேந்திரா தர்மலிங்கம் தாயகப் பணிகளை மேற்கொண்ட காலத்தில் தேசத்தின் குரலோடு தனக்கிருந்த நற்புறவு பற்றியும் தேசப் பணிகள், தத்துவார்த்த விடயங்கள், அவரோடு ஏற்பட்ட அனுபவங்களையும் பகிர்ந்து கொண்டார்.

ஒஸ்லோ நகர சபை உறுப்பினரும் தமிழ் அமைப்புக்களின் ஒன்றிய இணைப்பாளருமான யோகராஜா பாலசிங்கம் அவர்களும் நினைவுரையாற்றினார்.

சிறுநீரக மாற்றீடு மேற்கொண்ட போதும் அதன் பின்னர் மதியுரைஞருடன் தனக்கேற்பட்ட அனுபவங்களைப் பகிர்ந்து கொண்ட மருத்துவர் பேர்பௌக்கால்ட்,மதியுரைஞரின் வியத்தகு ஆளுமை அவரது நற்பண்பு தொடர்பாகவும் தனது ஈர நினைவுகளைப் பகிர்ந்து கொண்டார்.

தொடர்ந்து தமிழீழ விடுதலை உணர்வாளர்கள், செயற்பாட்டாளர்களின் மற்றும் தமிழ் அமைப்புக்களின் பிரதிநிதிகளின் நினைவுரைகள் இடம்பெற்றன.

தேசத்தின் குரலின் பிரிவால் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் மக்கள் தமது கனத்த உணர்வுகளையும் நினைவுகளையும் நிகழ்வு மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்த பதிவேட்டில் பதிவாக்கினர்.

தமிழ் மக்களின் சுதந்திர வாழ்வுக்காகவே சிந்தித்தவர், பேசியவர், எழுதியவர், தன்னை வருத்தி உழைத்தவர் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம்.

அரசியல் ஆற்றலால் இயங்கித் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை சர்வதேச அரங்கிற்கு நகர்த்திய 'தேசத்தின் குரல்' மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் வரித்து நின்ற உன்னத இலட்சியத்தை வென்றெடுப்போம் என்ற உறுதி எடுத்ததுடன் கண்ணீர் வணக்க நிகழ்வு நிறைபெற்றது. (ச-5)

# இலங்கையில் சமாதானம்...

பாகிஸ்தானில் இடம்பெற்ற தெற்காசிய சுதந்திர ஊடகவியலாளர் அமைப்பின் கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய ஸ்ரோர் மேலும் தெரிவிக்கையில்,

அங்கு மோதலில் ஈடுபட்டுள்ள இரு தரப்பும் சகல வன்முறைகளையும் கைவிட்டு மீண்டும் அமைதிக்கான பேச்சுவார்த்தைக்கு வருவார்கள் என நாங்கள் தற்போது நம்பிக்கை கொண்டுள்ளோம்.

அமுலில் உள்ள போர்நிறுத்த ஒப்பந்தத்தில் உள்ள அம்சங்கள் மிகவும் உபயோகமானவை. அது மிகவும் வலிமையானது என நாங்கள் நம்புகின்றோம்.

அதேபோல் முரண்பட்டுள்ள இருதரப்பும் கூட அது வலிதான அம்சமென எங்களிடம் தெரிவித்துள்ளனர். அரசாங்கத்துக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் கைச்சாத்தான போர்நிறுத்த ஒப்பந்தம் தற்போது அங்கு அமுலில் உள்ளது.

அதற்கு முரணாகச் செயற்பட முனைவது பொறுப்பற்ற செயலாகும். இலங்கை அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் தொடர்ந்தும் எமது அனுசரணைப் பணியை வேண்டி நிற்கின்றனர். நாங்கள் அங்கு இருக்க வேண்டுமென அவர்கள் விரும்புகின்றனர்.

எங்களது செயற்பாடுகளை வரையறைசெய்து எமது நோக்கம் வெற்றி பெற நாம் செயற்பட்டு வருகின்றோம். (ச-5)


## சிறுவிளம்பரம்

### மணமகள் தேவை

அரச வங்கியொன்றில் பணிபுரியும் முப்பது வயதுடைய உத்தியோகத்தருக்கு மணமகள் தேவை. யாழ்.இந்து.சதய நட்சத்திரம், செவ்வாய்க்குற்றமற்றவர், மொத்த கிரக பாவம் ஒன்றேமுக்கால். மே/பா. வலம்புரி, விளம்பர இல.140, யாழ்ப்பாணம். அ.சோமபாலன், 35,மாரியம்மன் ஒழுங்கை,திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பரணம். (679)

## யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்

### பணியாளர் தேவை

பதவி :- களஞ்சியக் காப்பாளருக்கான உதவியாளர் (S.K)
வயது :- 40 தொடக்கம் 55 வரை
தகைமை :- முன்னனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
குறிப்பு :- மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை.
காலம் :- *18/12/2006* அன்று காலை 11 மணிக்கு நேரில் சமுகமளிக்கவும்.

செயலாளர்.

183, ஆடியபாதம் றோட்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

(c-563)

## யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்

### பிஸ்கட் உற்பத்திக்கு அனுமதி

16.12.2006 தொடக்கம் கீழ் வரும் பிஸ்கட் வகைகள் உற்பத்தி செய்ய அனுமதிக்கப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| பேபி றஸ்க் | -100 கிராம் - | ரூ.20.00 |
| வட்ட றஸ்க் | - 1 தனி - | ரூ. 2.00 |
| மடத்தல் றஸ்க் | - 1 தனி - | ரூ. 2.50 |

மேற்படி விலைகளுக்குக் கூடாமல் விற்பனை செய்யப்பட வேண்டும். அரசாங்க அதிபரினதும் சங்கத்தினதும் கட்டுப்பாடுகளை மீறும் வெதுப்பகங்களுக்கு மா விநியோகம் நிறுத்தப்படும்.

*(அரசாங்க அதிபரின் அறிவுறுத்தலுக்கிணங்க)*

செயலாளர்

183, ஆடியபாதம் றோட்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

(c-564)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.12.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.